செய்தி  வெளியீடு எண்:396 நாள் : 05.08.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (5.8.2016) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில் சென்னை, டாக்டர் ராதாகிருஷ்ணன் நகரில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்தார்கள். மேலும், சென்னை, தரமணியில் உள்ள மைய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் 22 கோடி 77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பணிமனைக் கட்டடம், 26 கோடி 58 லட்சம் 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கல்லூரிக் கட்டடங்கள், அலுவலகக் கட்டடங்கள், பணிமனைக் கட்டடங்கள், காட்சிக்கூடங்கள் மற்றும் பரிணாம வளர்ச்சிப் பூங்கா ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மாணவர்கள் உயர்கல்வி கற்று வேலைவாய்ப்பினைப் பெற்று வாழ்வில் சிறப்பான நிலையை அடையவேண்டும் என்ற உயரிய நோக்கில், கடந்த 5 ஆண்டுகளில் 39 அரசு பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 11 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 4 அரசு பொறியியல் கல்லூரிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசால் துவங்கப்பட்டு, மாணவ சமுதாயத்திற்கு சிறப்பான சேவை ஆற்றி வருகிறது.

அந்த வகையில், சென்னை, டாக்டர் ராதாகிருஷ்ணன் நகரில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள். இந்த அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிக்கான நிரந்தர கட்டடம் டாக்டர் ராதாகிருஷ்ணன் நகரில் கட்டி முடிக்கப்படும் வரை தற்காலிகமாக சென்னை, தரமணியில் உள்ள மைய பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் இயங்கும்.

மேலும், சென்னை, தரமணியில் உள்ள மைய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் 1,26,475 சதுர அடி கட்டட பரப்பளவில், தரை மற்றும் நான்கு தளங்களுடன், 40 பணிமனைகள், சரக்கு மற்றும் பணியாளர்களுக்கான தனித்தனி மின்தூக்கிகள், பணியாளர் அறைகள், சாய்வு தளம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் 22 கோடி 77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பணிமனைக் கட்டடம்;

திருச்சிராப்பள்ளியில் 1 கோடி 61 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திருச்சிராப்பள்ளி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம்; மதுரையில் 1 கோடி 37 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம்; திருநெல்வேலியில் 1 கோடி 61 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திருநெல்வேலி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம்; திருப்பூர் மாவட்டம் – காங்கேயத்தில் 7 கோடி 97 லட்சம் 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் கல்வி மற்றும் நிர்வாகக் கட்டடம்; நாகப்பட்டினம் மாவட்டம்– வேதாரண்யத்தில் 7 கோடி 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் கல்வி மற்றும் நிர்வாகக் கட்டடம்; மதுரையில் தமிழ்நாடு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 1 கோடி 67 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பணிமனைக் கட்டடம்;

சென்னை, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்தைச் சார்ந்த பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் 2 கோடி 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள அணுக்கரு ஆற்றல் காட்சிக்கூடம், 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதுமைகாண் காட்சிக் கூடம் மற்றும் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி காட்சிக் கூடம், திருச்சிராப்பள்ளி, அண்ணா அறிவியல் மைய கோளரங்கத்தில் 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பரிணாம வளர்ச்சிப் பூங்கா;

என மொத்தம் 49 கோடி 35 லட்சம் 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கல்லூரி, அலுவலக, பணிமனைக் கட்டடங்கள், காட்சிக்கூடங்கள் மற்றும் பரிணாம வளர்ச்சிப் பூங்கா ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், தேனி மாவட்டம் – வீரபாண்டி, ஈரோடு மாவட்டம் – சத்தியமங்கலம், கன்னியாகுமாரி மாவட்டம் – நாகர்கோவில் ஆகிய இடங்களில் 3 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், தர்மபுரி மாவட்டம் – கடத்தூர், திருவாரூர் மாவட்டம் – வலங்கைமான், தஞ்சாவூர் மாவட்டம் – ரகுநாதபுரம், கிருஷ்ணகிரி மாவட்டம் –

கெலமங்கலம் ஆகிய இடங்களில் 4 அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன், தலைமைச் செயலாளர் முனைவர் பா.இராம மோகன ராவ், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி.ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப (ஓய்வு), உயர்கல்வித் துறை செயலாளர் (கூடுதல் பொறுப்பு) திரு.ஏ.கார்த்திக், இ.ஆ.ப., தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் திருமதி எஸ்.மதுமதி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 5.8.2016**